ORIGINAL ARTICLE

# சிறுபான்மை சூழமைவில் முஸ்லிம் பெண்கள் தாதியர்களாகப் பணிபுரிதல்: ஓர் இஸ்லாமிய சட்டவியல் பகுப்பாய்வு

# [CIṞUPĀṈMAI CŪḺAMAIVIL MUSLIM PEṆKAḶ TĀTIYARKAḶĀKAP PAṆIPURITAL: ŌR ISLĀMIYA CAṬṬAVIYAL PAKUPPĀYVU]

# SERVING AS MUSLIM FEMALE NURSES IN MINORITY CONTEXT: AN ISLAMIC LEGAL ANALYSIS

**எம்.ஆர்.ஜே. ஸுஹைமா / M.R.J. Suhaima *[1]**
**எஸ்.எம்.எம். மஸாஹிர் / S.M.M. Mazahir [2]**
**எம்.எம்.ஏ. அப்துல்லாஹ் / M.M.A. Abdullah [3]**

[1] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka, Sri Lanka.
Email: suhaimaroomy@gmail.com
[2] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka, Sri Lanka.
Email: mazahirsmm@seu.ac.lk
[3] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka, Sri Lanka.
Email: abdullahmma416@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/201

**Abstract**

Nursing is one of the oldest and most sacred professions in the world. The nurses contribute immensely to society and healthcare organizations by providing their services in personal care, medical treatment management, and working with families and the communities. In Islam, the service of nurses is considered a phenomenal deed, and it is a Fardu Kifayah (Societal Obligation). However, Muslim female nurses face various challenges as they live as minority communities in pluralistic societies. Eventually, they are not interested in this sector. Accordingly, the study aims to identify the Islamic legal perspective on Muslim women's service as nurses in a minority context. Based on the qualitative research method, the data from primary sources of Islamic law, the Holy Qur'an and Sunnah, fatwas of Islamic scholars and international *fiqh* academies and the code of ethics for nurses found in topic-related data have been analysed using the content analysis method. This research deliberates the obstacles that Muslim women face when working as nurses in a minority environment, and the guidelines that they should adhere to when working as nurses in a minority context.

**Keywords**: Minority, Pluralism, Muslim Women, Nurses, Islam, Law

**ஆய்வுச் சாரம்**

செவிலிப்பணி கலைகளுள் பழமையானதாகவும், பணிகளுள் புனிதமானதாகவும் விளங்குகின்றது. தனிநபர் பராமரிப்பு, சிகிச்சை மேலாண்மை, குடும்பங்களோடும் சமுதாயத்தோடும் இணைந்து பணியாற்றுதல் ஆகிய பலதரப்பட்ட பங்களிப்புகள் சமுதாயத்திலும், சுகாதாரப் பராமரிப்பு அமைப்புகளிலும் தாதியர்களால் வழங்கப்பட்டு வருகின்றன. இஸ்லாத்தில் தாதியர்களின் சேவை மகத்தான செயலாகவும் *பர்ளு கிபாயா*வாகவும் நோக்கப்படுகின்றது. எனினும் சிறுபான்மையாக வாழும் போது முஸ்லிம் பெண் தாதியர்கள் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருப்பதால் இத்துறையில் அவர்களின் பங்குபற்றுதல் மிகவும் குறைவாகும். இந்நிலைமையை இஸ்லாமிய ஷரீஆவின் கீழ் பரிசீலனை செய்வது காலத்தின் தேவையாகக் காணப்படுகின்றது. பண்புசார் முறையிலமைந்த இவ்வாய்வுக்கான தரவுகள் இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களான அல்குர்ஆன், ஸுன்னா, இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் மற்றும் சர்வதேச பிக்ஹ் நிறுவனங்களின் பத்வாக்கள் மற்றும் தாதியர் தொடர்பான நவீன ஆய்வுகளில் இருந்து பெறப்பட்டு உள்ளடக்க பகுப்பாய்வு முறை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இவ்வாய்வானது சிறுபான்மை சூழலில் முஸ்லிம் பெண்கள் செவிலியர்களாக பணி புரியும் போது எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும், சிறுபான்மை சமூகத்தில் முஸ்லிம் பெண்கள் செவிலியர்களாக பணிபுரியும் போது பேணவேண்டிய வரையறைகள் குறித்தும் கலந்துரையாடுகிறது.

**கருச்சொற்கள்:** சிறுபான்மை, பன்மைத்துவம், முஸ்லிம் பெண்கள், தாதியர்கள், இஸ்லாம், சட்டவியல்

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 4th April 2022, revised 29th April 2022, accepted 17th May 2022

## முன்னுரை

இஸ்லாமிய சட்டங்களைப் பொறுத்தவரையில் அது மனித நலன்களை (அல் மஸாலிஹ்) பாதுகாப்பதையும் அவர்களுக்கான உரிமைகளையும் கடமைகளையும் வரையறுப்பதையும் நோக்காகக் கொண்டவையாகும் (Habeebullah et al., 2016)[1]. 18ஆம் நூற்றாண்டைத் தொடர்ந்து ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்புகள், நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சி, பூகோளமயமாக்கல், கைத்தொழில் மயமாக்கல் போன்றன காரணமாக நபி (ஸல்) அவர்களின் காலத்தில் காணப்படாத பல புதிய பிரச்சினைகள் பொதுவாக வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் குறிப்பாக அரசியல், பொருளாதாரம், மருத்துவத் துறைகளில் தோற்றம் பெற்று இஸ்லாமிய மார்க்கத் தீர்ப்புகளை வேண்டி நின்றன. இதன் போது இஸ்லாமிய அறிஞர்கள் துணை மூலாதாரங்களின் பால் தம் கவனத்தைக் குவித்ததுடன் நவீன இஸ்லாமிய சட்டப் பிரச்சினைகளுக்கு அம்மூலாதாரங்களின் துணைகொண்டு தீர்ப்புகளை வழங்கி வந்தனர் (Vellimedai Plus, 2014)[2].

செவிலிப்பணி (Nursing) கலைகளுள் பழமையானதாகவும் பணிகளுள் புனிதமானதாகவும் விளங்குகின்றது. செவிலியர் என்னும் வார்த்தையானது இலத்தீன் மொழியில் நியூட்ரிஸியஸ் (Nutrisious) அல்லது போஷாக்கு அளிப்பவர் எனும் வார்த்தையில் இருந்து மருவி வந்ததாகும். மருத்துவம் மற்றும் செவிலியப்பணி இரண்டும் ஒன்றுடன் ஒன்று இணைந்து புராணங்களிலும், பழங்கால கிழக்கு மற்றும் மேற்கு கலாச்சாரங்களிலும், மதங்களிலும் காணப்பட்டது (Vikaspedia, n.d.)[3].

இதனடிப்படையில் ஒரு மருத்துவமனையின் இன்றியமையாத ஊழியர்கள் செவிலியர்களாவர் (Ramesh, 2020)[4]. தனிநபர் பராமரிப்பு, சிகிச்சை மேலாண்மை, குடும்பங்களோடும் சமுதாயத்தோடும் இணைந்து பணியாற்றுதல் ஆகிய பலதரப்பட்ட பங்களிப்புகள் சமுதாயத்திலும், சுகாதாரப் பராமரிப்பு அமைப்புகளிலும் இவர்களால் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் சுகாதாரத்தை மேம்படுத்துதல், நோய்களைத் தடுத்தல், நோயாளிகள், ஊனமுற்றோர், மரணப்படுக்கையில் இருப்போர் ஆகியோரைப் பராமரித்தலும் இதிலடங்கும் (International Council of Nurses, n.d.)[5].

வலிமையற்றவர்களுக்கான அனுதாபத்தையும், பொறுப்புக்கூறலையும் தன்னகத்தே சுமந்தது இஸ்லாமிய மரபு. தாதியர் தொழில் இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் ஒரு புதிய விடயமல்ல. இஸ்லாத்தில் தாதியர்கள் அல்லாஹ்வின் மீதும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீதும் கொண்ட அன்பின் வெளிப்பாடாக நோயாளிகள், குடும்பங்கள், மற்றும் சமூகங்களுக்கிடையில் சுகாதார சேவைகளை வழங்கி வருகின்றனர் (Rasool, 2000)[6].
நோயாளிகளைப் பராமரித்தல் மற்றும் அவர்களின் தேவைகளை நிறைவேற்றல் எனும் இரு அர்த்தங்களின் அடிப்படையின் கீழ் இஸ்லாம் தாதியர்களை நோக்குகின்றது. இதனாலேயே பராமரித்தலானது இஸ்லாமிய சிந்தனையின் ஒரு பண்பாகக் கருதப்படுகின்றது. இஸ்லாம் மனிதர்களுக்கு மாத்திரமின்றி பிற உயிர்களின் மீதும் அக்கறையுடன் நடக்குமாறு வலியுறுத்துகின்றது. இதனடிப்படையிலேயே இஸ்லாமிய வரலாற்றின் முற்பகுதியிலும் அனைத்து போர்களின் போதும் நபி (ஸல்) அவர்கள் காயமடைந்தவர்களை பராமரிக்க சில பெண்களை நியமித்திருந்தார்கள் (Taleghani et al., 2013)[7].

மேலும் 1974இல் இங்கிலாந்தை சேர்ந்த பிளாரன்ஸ் நைட்டிங்கேல் (Florence Nightingale) என்பவர் நவீன செவிலியர் முறையை உருவாக்கியவர்; போரின்போது காயப்பட்ட வீரர்களுக்கு ஓய்வின்றி மருந்திட்டு சேவை செய்தவர்; தாதியர் பயிற்சியை முதலில் ஆரம்பித்தவர் (Ramesh, 2020)[4] என்று உலக வரலாறு இன்று வரை அவரைப் போற்றினாலும் கூட தாதிமையின் அடிப்படை இஸ்லாத்திலிருந்து விதைக்கப்பட்டதாகும்.

இஸ்லாமிய வரலாற்றில் போர்க்களங்களில் பெண்கள் பல பணிகளை ஆற்றியுள்ளனர். இவற்றில் காயப்பட்டவர்களுக்கு நீர் புகட்டுவதும், காயங்களுக்கு சிகிச்சை அளிப்பதுமே அப்போதைய முதல்தரப் பணியாக விளங்கின. இந்த வகையில் ருபைதா அல் அஸ்லமியா என்ற ஸஹாபியப் பெண்மணி இஸ்லாத்தில் முதலாவது தாதியராகக் கருதப்படுகின்றார். இப்பெண்ணுக்கு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கந்தக் யுத்தத்தில் காயப்பட்டவர்களைக் கவனிப்பதற்காக இன்றைய நடமாடும் மருத்துவமனையை ஒத்த பெரிய கூடாரமொன்றையே தனியாக அமைத்துக் கொடுத்தார்கள். ருபைதா (ரழி) அவர்களுக்கு உதவுவதற்காக அவரது தலைமையில் பெண்கள் குழுவொன்றும் பணியில் ஈடுபட்டது (Thoodhu, 2018)[8].

"நிச்சயமாக எவன் ஒருவன் மற்றொருவரைக் கொலை செய்கிறானோ அவன் மனிதர்கள் யாவரையுமே கொலை செய்தவன் போலாவான். மேலும் எவரொருவர் ஓர் ஆத்மாவை வாழ வைக்கிறாரோ அவர் மக்கள் யாவரையும் வாழ வைப்பவரைப் போலாவார்" (5:32)[9] எனும் அல்குர்ஆனிய வசனமும் தாதியர் தொழிலின் மகத்துவத்தை உணர்த்தக் கூடியதாகும்.

அத்துடன் இஸ்லாம் பெண்களுக்கு பல்வேறு உரிமைகளை வழங்கியுள்ளது. அதில் தான் விரும்பும் தொழிலை இஸ்லாமிய வரம்பிற்குள் நின்று தெரிவு செய்துகொள்ள அவளுக்கு உரிமையுண்டு. அத்துடன் இஸ்லாத்தில் தாதியர்களின் சேவை மகத்தான செயலாகக் கருதப்படுகின்றது. மேலும் இது பர்ளு கிபாயாகவே நோக்கப்படுகின்றது. எனினும் பன்மைத்துவ சமூகங்களுக்கு மத்தியில் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் போது முஸ்லிம் பெண் தாதியர்கள் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டி இருப்பதனால் இத்துறையினுள் முஸ்லிம் பெண்களின் ஈடுபாடு மிகவும் குறைவாகும். இந்நிலைமையை இஸ்லாமிய ஷரீஆவின் கீழ் பரிசீலனை செய்வது காலத்தின் தேவையாகக் காணப்படுகின்றது. எனவே, இவ்வாய்வானது முஸ்லிம் பெண்கள் சிறுபான்மை சூழலில் தாதியர்களாகப் பணிபுரியும் போது எவ்வாறான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பது குறித்து ஆராய முனைகிறது.

## ஆய்வின் குறிக்கோள் (Research Objective)

இவ்வாய்வு சிறுபான்மை சூழமைவில் முஸ்லிம் பெண்கள் தாதியர்களாகப் பணியாற்றுவததில் காணப்படும் சவால்களை இனங்கண்டு அவை தொடர்பான இஸ்லாமிய வழிகாட்டல்களை விபரிக்க முனைகிறது.

## ஆய்வு முறையியல் (Research Methodology)

இது ஒரு பண்புசார் ஆய்வாகும். இவ்வாய்வுக்கான தரவுகள் இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களான அல்குர்ஆன், சுன்னா, இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் மற்றும் சர்வதேச பிக்ஹ்மன்றங்களின் பத்வாக்கள் மற்றும் தாதியர் ஒழுக்கக்கோவை போன்ற மூலங்களில் இருந்து பெறப்பட்டன. மேலும் இவற்றிற்கு மேலதிகமாக ஆய்வுக் கட்டுரைகள், இணையதள ஆக்கங்கள் என்பவற்றின் மூலமாகவும் தரவுகள் திரட்டப்பட்டு உள்ளடக்கப் பகுப்பாய்வு முறை (content analysis method) மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## ஆய்வு முக்கியத்துவம் (Significance of the Study)

முஸ்லிம்களால் உரிய முக்கியத்துவம் கொடுத்து ஆய்வு செய்யப்படாத ஒரு பகுதியாக இது காணப்படுகின்றது. மேலும் இது ஒரு பர்ளு கிபாயாகும். இந்த அடிப்படையில் ஒரு சமூகக் கடமையை தெளிவுபடுத்துகின்றது என்ற வகையில் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது. இன்று கொரோனா வைரஸ் உலகளாவிய சமூகத் தொற்றாக மாறியிருக்கும் வேளையில் சுகாதாரத் துறையினரின் இடைவிடாத உழைப்பு அவசியமாகின்றது. அந்தவகையில் முஸ்லிம் மாதர்கள் மானிடர்களின் உயிர்காக்கப் போராடும் பணியில் தாதியர்களாக இணைந்து

செயலாற்றுவது மனிதநேயக் கடமையாகும். இதனைச் செய்வதற்கேற்ற சூழலை உருவாக்குதல் என்ற வகையில் இந்த ஆய்வு முக்கியம் பெறுகின்றது.

## கலந்துரையாடலும் பெறுபேறுகளும் (Discussion and Results)

இலங்கை, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, மியான்மார், கம்போடியா, வியட்னாம், சீனா, ஜெர்மனி, பிரான்ஸ், மொசாம்பிக் போன்ற 21 நாடுகளில் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்ந்து வருகின்றனர் (Abedin, 2017)[10]. சிறுபான்மை முஸ்லிம்கள் பிற சமூகங்களுடன் சேர்ந்து வாழும்போது பல்வேறுபட்ட சமூக, பொருளாதார, அரசியல் ரீதியிலான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இந்த பிரச்சினைகளை எவ்வாறு அணுகுவது? இந்த பிரச்சினைகளுக்கான மார்க்க ரீதியிலான தீர்ப்பினை எப்படி பெறுவது? முஸ்லிம்களின் பாதுகாப்பை எப்படி உறுதி செய்வது? என்பன முக்கியமான சவால்களாக திகழ்கின்றன (Ismail, 2019)[11].

இதனடிப்படையில் முஸ்லிம் தாதியர்கள் எதிர்நோக்கும் சவால்களை அடையாளப்படுத்தும் போது, சிறுபான்மை முஸ்லிம்களைக் கொண்ட சிங்கப்பூரின் தற்போதைய சூழ்நிலையில் முஸ்லிம் பெண்கள் ஹிஜாப் அணிந்த நிலையில் தாதியர்களாகப் பணிபுரிய முடியாத காரணத்தினால் அங்கு அவர்கள் தாதியர்களாக பணிபுரிவதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. ஹிஜாப் அணியாது தொழில் புரியும் போது அது பாவமாக மாறிவிடும் எனும் கருத்தில் பெற்றோர்களும் தம் பெண் பிள்ளைகளை தாதியர் கற்கை நெறியில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். பெற்றோரின் விருப்பத்தின் கீழ் இக்கட்டான சூழ்நிலைகளை தவிர்த்து பிற தொழில் துறைகளை தேர்ந்தெடுப்பதே சிறந்தது எனும் நிலைப்பாடு இங்கு காணப்படுவதாக Hassan (2020)[12] சுட்டிக்காட்டியுள்ளார். பொதுவாக இதே நிலை சிறுபான்மை முஸ்லிம் சமூகங்களிடையே நிலவி வருவதை அவதானிக்க முடிகின்றது. அதிலும் குறிப்பாக இலங்கை நாட்டில் சிங்கப்பூரின் நிலைப்பாட்டை ஒத்த நிலையைக் காண முடியும்.

அந்தவகையில் இப்பகுதி சிறுபான்மை சூழலில் முஸ்லிம் பெண்கள் செவிலியர்களாக பணிபுரியும் போது எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவை தொடர்பான இஸ்லாமிய வழிகாட்டல்களையும் செவிலியர்களாக பணிபுரியும் போது பேண வேண்டிய வரையறைகளையும் கலந்துரையாடுகிறது.

### 1. சிறுபான்மை சூழலில் முஸ்லிம் பெண்கள் செவிலியர்களாகப் பணி புரியும் போது எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவை தொடர்பான பத்வாக்கள்

சிறுபான்மைச் சூழமைவில் தாதியர்களாகப் பணிபுரியும் முஸ்லிம் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் அவை தொடர்பான இஸ்லாமிய வழிகாட்டல்களை பின்வருமாறு விபரிக்க முடியும்.

- **வீட்டிற்கு வெளியே தாதியராக தொழில் புரிதல்**

ஒரு பெண் தொழில் புரியும் நிலை ஏற்படும் போது அவள் வீட்டிற்கு வெளியே வேலை செய்ய அனுமதிக்கப்படுகிறாள். ஷுஐப் (அலை) அவர்களின் இரண்டு மகள்கள் ஆடுகளுக்கு தண்ணீர்

புகட்டினார்கள். அஸ்மா பின்த் அபூபக்கர் (ரழி) வீட்டுக்கு வெளியே வேலை செய்துள்ளார்கள். ஒரு பெண் தன் குழந்தைகளுடன் விதவையாகி அவர்களுக்கு உணவளிக்க வசதி இல்லாத நிலையில் பைத்துல்மாலில் பணம் பெறவில்லை என்றால் அவர் தன் செலவுக்கு சம்பாதிக்க அனுமதிக்கப்படுவாள். எனினும் தன் தேவையை பூர்த்தி செய்ய உகந்த வேலையை அவள் தெரிவு செய்ய வேண்டும். எனினும் ஒட்டுமொத்த சமுதாயத்திற்கு தேவைப்படும் தொழில்முறை திறன்கள் ஒரு பெண்ணிடம் காணப்படும் போது அவள் ஷரீஆவின் நிபந்தனைகளை கடைபிடித்தவாறு வீட்டிற்கு வெளியே தொழில் புரியலாம்.

இஸ்லாமிய வலிகட்டல்களுக்கு இணங்க பொதுவாக ஒரு பெண் வீட்டிற்கு வெளியே தாதியாகத் தொழில் புரியும் போது அவளது சட்டபூர்வ பாதுகாவலரின் அனுமதி அவளுக்கு வழங்கப்பட வேண்டும். நபி (ஸல்) அவர்களின் காலத்திலும் கூட மருத்துவச்சிகள் (Midwives) பெண்களின் பிரசவத்தில் உதவியாளர்களாக இருந்தனர். மேலும் திறமையான பெண்கள் விருத்தசேதனம் செய்வார்கள். அதனை நபியவர்கள் தடுத்ததில்லை.

மேலும் ருபைதா எனும் அன்ஸாரிப் பெண்மணி பள்ளிவாயலில் தமக்காக அமைக்கப்பட்டிருந்த கூடாரத்தில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளித்துள்ளார். இது நபி (ஸல்) அவர்களின் வெளிப்படையான அனுமதியுடன் மேற்கொள்ளப்பட்டது. மேலும் சிகிச்சை அளிப்பதில் அவர் திறமையானவராக அடையாளம் காணப்பட்டார். ஸஅத் இப்னு முஆத் (ரழி) அவர்களுக்கு ருபைதா (ரழி) அவர்களின் கூடாரத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

இது ஒரு பெண் வீட்டிற்கு வெளியே தனது தொழிலை மேற்கொள்வதற்கான அனுமதி ஆகும். பெண்கள் மற்றும் சிறுவர்களின் சிகிச்சைக்காக ஒரு பெண் மருத்துவர் தனது வீட்டிற்கு வெளியே கிளினிக்கை (clinic) திறப்பதும் அனுமதிக்கப்பட்டது. இதைச் செய்வதன் மூலம் அவள் பர்ளு கிபாயாவின் கடமையை நிறைவேற்றுகிறாள். இவ்வாறான கிளினிக்குகள்; பெண்கள், பெண் வைத்தியர்களை நாடி சிகிச்சை பெறுவதை எளிதாக்குகின்றது. மேலும் இது ஆண் மருத்துவர்களிடம் தனது அவ்ரத்தை (மறைவிடம்) வெளிப்படுத்தும் இக்கட்டான சூழ்நிலையில் இருந்து பாதுகாக்கின்றது.

ஆனால் இத்தொழில் அவளுடைய சொந்த வேலை, வீடு, கணவன் மற்றும் பிள்ளைகளின் மீதான தனது கடமையை பாதிக்காது என்ற நிபந்தனையின் கீழ் அனுமதிக்கப்படுகின்றது. மேலும் இது பர்ளு கிபாயா என்பதால் அவளது கணவனின் அனுமதி முக்கியமானதாகும். ஏனெனில் அவளது தனிப்பட்ட கடமைக்கு இங்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேலும் ஒரு பெண் வீட்டிற்கு வெளியே தாதியாக பணிபுரியும் போது ஒரு ஆணுடன் தனித்திருத்தல், மறைமுக சிகிச்சைகளை வழங்குதல் போன்றவை தடுக்கப்பட வேண்டும். மேலும் ஹிஜாபினை முழுமையாகப் பேணி பணிபுரியும்போது அத்தொழில் அவளுக்கு ஆகுமாக்கப்படும். கொள்கை அளவில் ஆணுக்கு ஆண் பெண்ணுக்குப் பெண் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றபோதிலும் அவசர சூழ்நிலைகளிலும் தேவைகளின் போதும் ஒரு பெண் தாதியர் ஒரு ஆண் நோயாளிக்கு சிகிச்சை அளிப்பதும், பராமரிப்பதும் ஆகுமானதாகும் (Islam Question and Answer, 1998)[13].

- **பெற்றோரின் எதிர்ப்பு**

தற்போதைய சூழ்நிலையில் செவிலியர்கள் ஹிஜாப் அணிய முடியாத காரணத்தினால் தொழில் பாவமாக மாறிவிடும் எனும் கருத்தில் பெற்றோர்கள் தம் பெண் பிள்ளைகளை தாதியராகத் தொழில் புரிவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். ஒரு சிலர் இதையும் தாண்டி பணிபுரிந்து வருகின்றனர். பெற்றோரின் விருப்பத்தின் கீழ் இக்கட்டான சூழ்நிலைகளை தவிர்க்கும் பொருட்டு பிற வேலைகளை தேர்ந்தெடுப்பதே சிறந்தது எனும் நிலைப்பாடு காணப்படுகின்றது. மேலும் ஒரு சிலரே முஸ்லிம் சிறுபான்மை சூழலில் தாதியர்களாக பணி புரிகின்றனர் (Hassan, 2020)[12].

செவிலியரின் பணியானது மனித வாழ்க்கையின் தொடக்க காலத்தில் இருந்தே உள்ளது. தாயின் குழந்தைப் பராமரிப்பில் ஆரம்பித்து, அவர்களைக் காப்பாற்றி, நோய்களிலிருந்து குடும்பத்தினரைப் பாதுகாத்து, வீட்டில் உள்ள முதியோரைக் கவனிப்பது வரை இது தொடர்கிறது. அன்பு நிறைந்த சேவை தேவைப்படும் இடங்களில் பெண்களே முதலிடம் பெறுகின்றனர். அதனால்தான் செவிலியர் பணியில் பெண்கள் அதிகம் இருக்கிறார்கள் (Natarajan, 2021)[14].

சமுதாயத்திற்கு சேவை புரிய விரும்பும் ஒவ்வொரு பெண்ணுக்கும் செவிலியம் ஒரு கொள்கை சார் ஊழியமாகும் என்பதனை ஒவ்வொரு பெற்றோரும் புரிந்து கொள்ள வேண்டும். வெறுமனே உடல், உள நோய்களால் துன்புறும் நோயாளிகளை பராமரிக்கும் தொழில் மாத்திரமல்ல செவிலியம். மாறாக நோயாளிகளின் நிலைமையைத் தொடர்ந்து கவனித்தல், பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை முறையான இடைவெளிகளில் வழங்குதல், நோயாளிகளின் குறித்த நோய் நிலைகளை வைத்தியருக்க அறிவிப்பு செய்தல், அறுவை அரங்கிலும், ஆய்வகங்களிலும் மருத்துவ சாதனங்களை உரிய விதத்தில் பொருத்துதல் போன்ற பணிகளை செய்வதுடன் ஏதாவது ஒரு காரணத்தினால் இயல்பு வாழ்க்கையை நடாத்த இயலாதவர்களுக்கும் உதவுகிறார்கள். இத்தகைய பொது நடவடிக்கை மாத்திரமன்றி இதயப் பாதுகாப்பு, அவசர சிகிச்சைகள், குழந்தை மருத்துவம், முதியோர் பராமரிப்பு என இவர்களின் பணிகள் நீண்டு கொண்டே செல்லும்.

மேலும் இதய மார்பக செவிலியம், ஆபத்துக் கால பராமரிப்பு செவிலியம், அவசரகால செவிலியம், சிசு செவிலியம், நரம்பியல் துறை செவிலியம், சுகாதாரக் கல்வி நிர்வாக சேவை செவிலியம், புற்று நோயாளிகள் பராமரிப்பு செவிலியம், அறுவை அரங்க செவிலியம், புனர்வாழ்வு செவிலியம், பேருகால செவிலியம், முதியோர் பராமரிப்பு செவிலியம் என பல சிறப்புத் துறைகளும் இப்பணியில் காணப்படுகின்றது (Zahid, 2016)[15].

முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழக்கூடிய சூழலில் ஒரு சில தாதியர்களே குறித்த சிறப்புக் கற்கைகளில் பயிற்றப்பட்டவர்களாக இருப்பர். மேலும் அரசஃதனியார் மருத்துவமனைகள் தவிர அனாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் மற்றும் பிற துறைகளில் முஸ்லிம் செவிலியர்களின் பணி மிகவும் குறைவானதே. அதிலும் குறிப்பாக ஒரு நோயாளி அல்லது வயோதிபர் வீட்டில் பெறக்கூடிய சுகாதார சேவைகள் வரம்பற்றதாகும். மேற்கு நாடுகளில் வீடுகளுக்கு சென்று வயோதிபர்கள் அல்லது நோயாளிகளை பராமரிப்பதற்காக தாதியர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர். மேலும் அதற்கென தனியான கற்கை நெறிகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன. வீட்டிலிருக்கும் நிரந்தர நோயாளிகள், அங்கவீனர்கள், முதியோர்களின் தனிப்பட்ட சூழ்நிலையைப் பொருத்து சிறப்பு கவனிப்பு அவசியப்படும். வீட்டுப்

பராமரிப்பில் காயத்திற்கு மருந்திடல், ஆரோக்கியத்தை கண்காணித்தல், வலி கட்டுப்பாடு, உள ரீதியான ஆதரவு, சத்துணவு வழங்குதல், நடைப்பயிற்சி போன்ற இன்னும் பல பராமரிப்புக்கள் உள்ளடங்கும் (Johns Hopkins Medicine, n.d.)[16].

இதனடிப்படையில் சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தில் அரசஃதனியார் மருத்துவமனைகளுடன் மாத்திரம் செவிலியப் பணி சுருங்கி விடக்கூடாது. மாறாக தனிநபர் செவிலியம், முதியோர் பராமரிப்பு செவிலியம் குறித்த பயிற்சிகளும், ஒழுங்கு முறைகளும் சமூகத்தினால் வழங்கப்படுவது அவசியமாகும்.

வீட்டிலுள்ள அங்கவீனர்கள், நிரந்தர நோயாளிகள் போன்றோரை பெற்றோர் அல்லது சக குடும்ப உறுப்பினர்கள் கவனித்து வந்தாலும் கூட அவர்களின் நோய் நிலைமைக்கு ஏற்ற மருந்துகளை வழங்குதல், காயங்களுக்கு மருந்திடும் முறை, சத்துணவுத் திட்டம், வீட்டிலேயே மேற்கொள்ளப்படும் இரத்தம் அல்லது சிறுநீர் சோதனைகள், மருத்துவ உபகரணங்களை கையாளுதல் (Portable X-ray, Injection) போன்றவற்றை அவர்கள் அறியாதிருப்பர். எனவே, இத்தகைய ஒழுங்குகளை செய்து நோயாளிகளை கவனிப்பது குடும்ப உறுப்பினர்கள் மீது கடமை என்ற வகையில் இதற்காக பணம் செலுத்தியேனும் செவிலியர்களை நாட வேண்டிய தேவை உள்ளது. என்றாலும் இவ்வாறான பணிகளை செய்வதற்காக பயிற்சி பெற்ற ஆண் அல்லது பெண் செவிலியர்கள் முஸ்லிம் சமூகத்தில் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரே காணப்படுகின்றனர்.

ஆகவே, முஸ்லிம் சமூகத்தில் தாதியர்களை உருவாக்கும் பொறுப்பு பர்ளு கிபாயா என்ற அடிப்படையில் சமூகத்தையே சாரும். இத்தேவையின் நிலை கடுமையானதாக மாறும் போது அது பர்ளு ஐன் இன் அந்தஸ்தை எட்டி விடும். மேலும் தொழில் வாய்ப்புக்காக மாத்திரம் அன்றி வீடுகளில் உள்ளவர்களை பராமரிப்பதற்காக இக்கல்வி போதிக்கப்படுவது காலத்தின் தேவையாகும்.

எனவே, முஸ்லிம் பெண்கள் தாதியர்களாகப் பணிபுரிய வேண்டும் என்பதில் சமூகத்தில் காணப்படும் மூத்த இஸ்லாமிய தலைவர்கள் தாதியர் தொழிலை ஊக்குவிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்த வேண்டும். மேலும் பெற்றோர்களை சமாதானப்படுத்தி பெண்களை இத்தொழிலுக்குள் உள்வாங்குவதற்கு உலமாக்கள் ஒப்புதல் வழங்க வேண்டும். ஆரம்ப கட்டங்களில் நடந்த போர்களில் முஸ்லிம் பெண்கள் காயமடைந்தவர்களுக்கு பணிவிடை செய்தனர். இஸ்லாமிய ஷரீஆவும் ஒரு பெண் தாதியராக தொழில் புரிவதனை ஒருபோதும் தடுத்ததில்லை.

மர்கஸ் அல் மஆரிப் இன் இமாம் புர்கானுதீன் காஸிமி பிரபல ஊடக சந்திப்பொன்றில் கருத்து வெளியிடுகையில், பெண் செவிலியர்கள் அந்நியர்களுடன் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்ற கருத்து தவறானதாகும். சிறிய பிரச்சினைகளை பெரிதுபடுத்திப் பார்க்கும் எமது சமூகம் ஏன் பெண் செவிலியர்களின் பற்றாக்குறையை ஒரு பொருட்டாகப் பார்ப்பதில்லை? ஒவ்வொரு பெற்றோரும் பிற பெண் நோயாளிகள் பெண் தாதியர்கள் மற்றும் பெண் மருத்துவர்களால் பராமரிக்கப்பட வேண்டும் என்பதனை உறுதியாக ஆதரிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார் (Wajihuddin, 2010)[17]. எனவே, இது பர்ளு கிபாயாவின் ஒரு அடிப்படையை பூர்த்தி செய்கின்றது என்ற வகையில் பெண்கள் தாதியர்களாக சிறுபான்மை சமூகங்களில் உருவாக்கப்படுவது காலத்தின் தேவையாகும்.

- **தாதியராகத் தொழில் புரியும் போது ஹிஜாப் அணிய முடியாமை**

சிறுபான்மை சூழலில் முஸ்லிம் பெண்கள் தாதியர்களாகக் கடமை புரிவதனைத் தடுக்கும் பாரிய பிரச்சினையாக ஹிஜாப் அணிய முடியாமையினை அடையாளப்படுத்த முடியும் (Saidun et al., 2018)[18].

2002இல் சிங்கப்பூரில் இடம்பெற்ற பள்ளி மாணவர்களின் சீருடை தொடர்பில் எழுப்பப்பட்ட பிரச்சினையின் போது சிங்கப்பூரின் மாண்புமிகு முப்தி ஸையத் ஈஸா செமைத், பள்ளி சீருடையில் இருந்து ஹிஜாபை விலக்குவதானது பெண் குழந்தைகளை பாடசாலையில் சேர்ப்பதனை ஹராமாக்காது. இங்கு கல்வியின் மூலம் அறிவை தேடுவதற்கான கடமை ஹிஜாப் அணியும் கடமையை விட அதிகமானதாகும். பள்ளிக்கூடத்தில் ஹிஜாப் அணியாத போது ஏற்படும் தீமையுடன் ஒப்பிடுகையில் கல்வியானது தனிநபர் மற்றும் சமூகத்திற்கு அதிக நன்மையையே தருகின்றது. மேலும் பெண் பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லாததால் ஏற்படும் பாதிப்பானது ஹிஜாப் அணிய முடியாததால் ஏற்படும் விளைவுகளை விட பாரிய விளைவுகளையே ஏற்படுத்தும். எனவே, இங்கு கல்விக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என பத்வா வெளியிட்டார் (Hassan, 2020)[12].

ஹிஜாப் அணிய முடியாது என்பதற்காக பாடசாலைக்குச் செல்லாவிட்டால் சமூகம் பாதிக்கப்படும் என்ற இந்த பத்வாவை தாதியர் தொழிலுடன் ஒப்பிடும்போது, தாதியாக பணிபுரிவது ழரூரியாத் அஷ்ஷரீஆவின் (மத அத்தியவசியம்) கீழ் வராது. ஆனால் முஸ்லிம் சமூகத்தில் தாதியர்களின் தேவை கடுமையான தேவையாக உள்ளது. எனவே, இது ஹாஜாத் அஷ் ஷரீஆவின் (தேவைகள்) கீழ்வரும். இங்கு ஹாஜாத் அஷ் ஷரீஆவாக கருதப்படும் இரு விடயங்களாக,

- ✓ முஸ்லிம் பெண் தாதியர்கள் நோயாளிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும்போது அங்கு முஸ்லிம் நோயாளிகளின் உரிமைகள் பாதுகாக்கப்படும்.
- ✓ திறமையான தாதியர்கள் மற்றும் அவர்களின் சிறந்த நடத்தை மூலமாக இஸ்லாம் மற்றும் முஸ்லிம்கள் குறித்த தப்பபிப்பிராயங்கள் களையப்பட்டு, இஸ்லாத்தின் கௌரவம் வெளிப்படுவதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

முஸ்லிமல்லாத ஆட்சியின் கீழ் சிறுபான்மையாக முஸ்லிம்கள் வாழும் போது ஹிஜாப் ஒரு தடையாக அமையுமாயின் சிறுபான்மை சூழலில் ஷரீஆவின் இறையியல் நிலைத்தன்மையையும், ஒத்திசைவையும் உறுதிப்படுத்த முடியாது போகும். மேலும் இது முஸ்லிம் பெண்களின் வேலை வாய்ப்புக்கான வரம்பாக மாறி விடுவதுடன் முஸ்லிம்களின் நல்வாழ்வை சீர்குலைக்கும். இந்நிலை ஷரீஆவிற்கு பொருந்தாது. ஏனெனில் இஸ்லாமிய ஷரீஆ இலகுவானது, கஷ்டத்தை நீக்கக்கூடியது.

மேலும் பொழுதுபோக்கு விடுதிகளில் ஒருவர் பணிபுரியும்போது அங்கு மதுபானம் பரிமாற்றப்படுவதற்காக அத்தொழில் ஹராமாக மாறாது. எனவே, இவ்வகையான தொழில்கள் சமூக மட்டத்தில் அணுகப்பட வேண்டும். மேலும் இங்கு நன்மை தீமையை விட அதிகமானதா என்பது அவதானிக்கப்பட வேண்டும். நன்மைகள் அதிகமாக இருப்பின் அது சமூகத்திலும், தனிநபர்களுக்கிடையிலும் ஹலாலாக ஆகிவிடும் (Hassan, 2020)[12].

மேலும் ஹிஜாப் என்ற வார்த்தையில் இங்கு குறிப்பிடப்படுவதன் பொருள் திரை, தடுப்பு, மதில் ஆகும். முஸ்லிம் பெண்கள் மஹ்ரமான ஆண்கள் அல்லாதவர்களின் முன்னிலையில் அணியும் ஒரு முக்காடு அல்லது தடுப்பையே இது குறிக்கின்றது. ஆடையில் மட்டுமல்லாமல் எண்ணங்கள், செயல்கள், இச்சைகள், என ஐம்புலன்களுக்குமான வரம்பு மீற அனுமதிக்காத

தடுப்பாகும் (Husainamma, 2016)[19]. இது முடி, தலை மற்றும் மார்பை மறைக்கக் கூடியதாகும். ஒரு முஸ்லிம் பெண்ணின் முகம், முன்னங்கை தவிர ஏனைய பகுதிகள் அவ்ராவாகும் (மறைக்கப்பட வேண்டிய பகுதி). எனவே, இஸ்லாமிய ஷரீஆவின் வரம்பினைப் பேணி முஸ்லிம் பெண்கள் அணியும் எந்த ஆடையும் ஹிஜாப் எனக் கருதப்படலாம். அதற்கென குறித்த வடிவம் கிடையாது (Glassé, 2003)[20].

- **பெரும்பான்மை முஸ்லிம்களைக் கொண்ட நாடுகளில் பணிபுரியும் தாதியர்களின் ஆடை முறைமை**

மலேசிய முஸ்லிம் நுகர்வோர் சங்கத்தினால் வழங்கப்பட்ட சுகாதார அதிகாரிகளுக்கான ஆடை முறை வழிகாட்டல்களின் அடிப்படையில் பரிந்துரைக்கப்பட்ட ஆடை அமைப்பு முறை என Saidun et al. (2018)[18] குறிப்பிட்டுள்ள முறையை இலங்கை நாட்டில் முஸ்லிம் பெண்கள் தாதியர்களாக பணிபுரியும் போது அணிவதற்காக இங்கு பரிந்துரை செய்ய முடியும்.

மேலும் பிரிட்டிஷ் இஸ்லாமிய மருத்துவ சங்கத்தினால் (British Islamic Medical Association-BIMA) தொடர்ந்தேர்சையாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையின் பிரிட்டிஷ் மருத்துவ சங்கம் (BMA) மற்றும் National Health Service Members, National Health Service Employers, National Health Service Improvement ஆகியவை இணைந்து தேசிய சீருடைகள் மற்றும் பணியாளர் கொள்கையைப் (National Uniforms and Workwear policy) புதுப்பித்தன. அதில் குறிப்பிடப்பட்டுள்ள முஸ்லிம் தாதியர்களுக்கான ஆடை அமைப்பு என Bissett (2021)[21] குறிப்பிடும் ஆடை ஒழுங்கையும் இங்கு பரிந்துரை செய்ய முடியும்.

மேலும் Saidun et al. (2020)[22] ஆகியோரினால் 1984ஆம் ஆண்டு முதல் 2018 வரையிலான காலப்பகுதிகளில் தாதியர்களின் சீருடை (uniform) வடிவமைப்பில் குறித்த பிரதேசத்தின் கலாசாரம், மதம் மற்றும் பராமரிப்பு நடைமுறைகளின் தரநிலைகளை ஒருங்கிணைக்கும் முகமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் குறித்து காட்டப்பட்டுள்ள முஸ்லிம் தாதியர்களுக்கான ஆடை அமைப்பையும் இங்கு பரிந்துரை செய்யலாம்.

அத்துடன் சவூதி அரேபியாவின் சுகாதார அமைச்சகம் அனைத்து மருத்துவமனைகளுக்கும் மருத்துவ ஊழியர்களுக்கான ஆடைக் குறியீடு தொடர்பில் சில விதிமுறைகளை உள்ளடக்கிய சுற்றறிக்கையை வெளியிட்டது (Life in Saudi Arabia, n.d.)[23]. அதில் செவிலியர்கள், பெண் மருத்துவர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள் இறுக்கமான அல்லது உடல் அமைப்புகளை வெளிப்படுத்தும் ஆடைகளை அணிவது, ஒப்பனை செய்து கொள்வது, நெயில் பாலிஷ் இடுவது ஆகியன தடை செய்யப்பட்டது. மேலும் அவர்களின் ஆடைகள் தளர்வாகவும் நீளமானதாகவும், தலைமுடி வெளியே தெரியாதவாறு ஹிஜாப் அணிவதும் கட்டாயமாக்கப்பட்டது. இதே அமைப்பில் ஆண் மருத்துவர்கள் மற்றும் ஆண் ஊழியர்களுக்கான விதியின் படி அவர்கள் பணி புரியும் நேரத்தில் எந்த விதமான கை வளையல் மற்றும் மோதிரம் போன்ற ஆபரணங்களை அணிவதற்கும், தலைமுடியை வித்தியாசமான அமைப்புகளில் வெட்டி தொப்பி அணிவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் முஸ்லிம் சிறுபான்மை சூழலில் குறித்த ஆடை தொடர்பில் தனிநபர் உரிமை மற்றும் மத உரிமை அடிப்படையில் சட்ட மாற்றங்களைக் கொண்டு வருவதற்காக முஸ்லிம் புத்திஜீவிகள் இது குறித்து கருத்து தெரிவிப்பது சமூகத்திற்குள் ஆக்கபூர்வமான மாற்றங்களைத் தோற்றுவிக்கும்.

- **தனக்கு மஹ்ரம் அல்லாத ஆண்/பெண் நோயாளிகளின் அவ்ராவைப் (மறைவிடம்) பார்வையிடல்**

ஒரு ஆண் அல்லது பெண் தனக்கு மஹ்ரம் அல்லாதவர்களின் தனிப்பட்ட பகுதிகளை (Private Parts) பார்க்கும் எந்த செயலும் இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டுள்ளதாகும். ஒரே பாலினமாக இருந்தாலும் எதிர்ப் பாலினமாக இருந்தாலும் மறைக்கப்பட வேண்டிய அவ்ரத்தை தொடவோஃபார்க்கவோ இஸ்லாத்தில் அனுமதியில்லை. குறிப்பாக இஸ்லாத்தின் சமூக ஒற்றுமையை பாதுகாக்கவும், ஒழுக்கச் சீர்கேட்டைத் தடுக்கவும், பாலியல் நோய்கள் பரவாமல் இருப்பதற்கான வரம்பாகவும் இது அமைகின்றது. பெண் அல்லது ஆண் அதே பாலினத்தை சேர்ந்த மருத்துவரை அல்லது தாதியரை சிகிச்சைக்காக கண்டுபிடிப்பது கடினமாக இருக்கும் போது இது அனுமதிக்கப்படும்.

மேலும் பெண்கள் தன் நோய் நிலைகளைப் பொறுத்து பெண் வைத்தியர்களை நாடவேண்டும். எனினும் பெண் வைத்தியர்கள் இருந்தும் ஆண் வைத்தியர் ஒருவர் குறித்த நோய் தொடர்பில் நிபுணராக இருக்கும்போது அவரிடம் செல்வது அனுமதிக்கதக்கதாகும். அவ்வாறு செல்லும் போது அப்பெண் முழுமையாக ஹிஜாபை பேணிக்கொள்ள வேண்டும். சிகிச்சை அளிக்க வேண்டிய இடம் தவிர உடலின் ஏனைய பகுதிகள் மறைக்கப்பட வேண்டும் என் தாருல் இப்தா பத்வா நிலைக்குழுவின் உறுப்பினரான இமாம் முஹம்மத் இப்னு ஆதம் அல் கௌதரி (n.d.)[26] குறிப்பிடுகின்றார்.

மேலும் முஸ்லிமல்லாத மருத்துவரிடம் சிகிச்சை பெறுதல் குறித்து ஷேய்க் முகம்மது அல் ஹைதர் ஹுஸைன் அவர்கள் குறிப்பிடுவது, கொள்கை அளவில் ஒரு முஸ்லிமுக்கு நோய் ஏற்படும்போது அவர் ஒரு முஸ்லிம் வைத்தியரின் உதவியை நாட வேண்டும். எனினும் முஸ்லிம்கள் முஸ்லிமல்லாத வைத்தியரிடம் சிகிச்சை பெற அனுமதி உண்டு. அதாவது ஒரு முஸ்லிம் மருத்துவர் இருந்தும் அவரை விட குறித்த நோயில் நிபுணத்துவம் பெற்ற முஸ்லிமல்லாத ஒருவர் இருக்கும்போது அவரிடம் செல்ல அனுமதி உண்டு.

ஸஅத் இப்னு அபீவக்காஸ் (ரழி) அவர்கள் அறிவிப்பதாவது, 'ஒரு தடவை நான் நோய்வாய்ப்பட்டிருந்தேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் என்னை சந்திக்க வந்தார்கள். அவர் என் நெஞ்சின் மேல் குளிர்ச்சியை உணரும் வரை கையை வைத்தார்கள். பின்னர், நீங்கள் இதய நோயால் அவதிப்படுகின்றீகள். எனவே, ஹாரித் இப்னு கல்தாவிடம் செல்லுங்கள். அவர் சிகிச்சை அளிக்கக் கூடியவர் என்று கூறினார்கள்' (அபூதாவூத்) இங்கு ஹாரித் இப்னு கல்தா முஸ்லிம் அல்லாதவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும் (Islamweb, 2003)[24].

தேவை என்பது அதை சுற்றியுள்ள சூழ்நிலைகளால் நிர்வகிக்கப்படுகின்றது. இதனால் ஷரீஆவின் அனுமதிகளை தவறாக பயன்படுத்தக்கூடாது. செவிலியர்களுக்கு தேவை ஏற்படும்போது எதிர்பாலினருக்கு சிகிச்சை அளிப்பதற்கு அனுமதி உண்டு. மேலும் அதப் அஷ் ஷரீஆ எனும் நூலில் இப்னு முஃப்ஸில் 'ஒரு பெண் நோய்வாய்ப்பட்டு ஒரு ஆணைத் தவிர அவளுக்கு யாரும் சிகிச்சை அளிக்கக் காணவில்லை என்றால் அவசியத்தின் கீழ் ஆணுக்கு அவளைப் பார்க்க முடியும். (தனிப்பட்ட உடல் பாகங்களை கூட மருத்துவ தேவைக்காக) ஆணுக்கு சிகிச்சையளிக்கும் பெண்ணுக்கும் இந்நிலை பொருந்தும்.

அபூ தைபா எனும் நபருக்கு கப்பிங் (cupping) செய்ய ஒரு பெண்ணுக்கு நபி (ஸல்) அவர்கள் அனுமதி வழங்கியமை இதற்கு சிறந்த ஆதாரமாகும் (Saqr, 2021)[25]. இது குறித்த

ஹதீஸ் புகாரியில் இடம்பெறுகின்றது. மேலும் அல் ரவ்த் அல் முறப்பி எனும் நூலில் அல் புஹுட்டி கூறுகையில், மருத்துவத் தேவைகளுக்கு மாத்திரம்ஃஅவசியத் தேவையின் போது செவிலியர்கள் நோயாளர்களின் அவ்ராவைப் பார்ப்பது அல்லது தொடுவது அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனை இப்னுல் காசிம் என்பவர் ருபைதா, உம்மு அதிய்யா, மற்று ஆயிஷா போன்றோர் முஸ்லிம் படைவீரர்களுக்கு தண்ணீர் புகட்டி சிகிச்சை அளித்தது போல என இதனை வர்ணிக்கின்றார் (Saqr, 2021)[25].

தன் சார்பாக ஒரு பெண் மருத்துவர் இருக்கும்போது அவருக்கு பதிலாக ஓர் ஆண் மருத்துவரிடம் சிகிச்சை பெறுவது தடை செய்யப்பட்டதாகும். இவ்வாறு இல்லை எனும் நிலையில் தன் அந்தரங்க உறுப்புகளை ஆண் மருத்துவரிடம் வெளிப்படுத்த முடியும். அஸ் ஸுயூத்தி, இப்னு நுஜய்ம் ஆகியோர் அல் அஷ்பாஹ் வன் நுஜூம் எனும் சட்ட நூலில் இதனை அனுமதிக்கலாம் என்று கூறுகின்றனர்.

மேலும் ஒரு பெண்ணுக்கு நோய் ஏற்பட்டு அது ஆபத்தாக இல்லாமல் கடுமையான வலியை ஏற்படுத்தினால் அவள் பெண் மருத்துவரிடம் அல்லது பெண் இல்லாதபோது ஆண் மருத்துவரிடம்ஃஒரு ஆண் பெண் செவிலியர்களிடம் தனது அந்தரங்க உறுப்புகளை வெளிப்படுத்த அனுமதியுண்டு. இங்கு தேவை பொதுவானதாக அல்லது குறிப்பிட்டதாக இருக்கலாம். இங்கு அந்தரங்கப் பகுதியை மறைப்பது அவசியம் என்றாலும் வலியை நிவர்த்தி செய்வது என்பது தேவையானதாகும். ஆனால் வலி குறைவாக இருப்பின் அவ்ரத்தைக் களைவது அனுமதிக்கப்படாது. இங்கு தனிப்பட்ட பகுதியை மறைப்பது வலியை விட முன்னுரிமை பெறும். ஏனெனில் அனுமதியை விட தடைக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இதனடிப்படையில் பெண் செவிலியர்கள் இக்கட்டான சூழ்நிலைகளில் ஆண்களின் அவ்ராவை (மறைவிடம்) பார்வையிட அனுமதியுண்டு (Abd Al-Mu'iz, n.d.)[26].

- **ஆண் நோயாளிகளுக்குப் பணிவிடை செய்தல்**

நோய்வாய்ப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பது முஸ்லிம்கள் மீதான சமூகக் கடமையாகும் (பர்ளு கிபாயா). இது அனைத்து மக்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டிய செயலாகும். நபி (ஸல்) கூறினார்கள். 'எந்த ஒரு உயிரினத்திற்கும் அளிக்கப்படும் சிகிச்சை தர்மமாகும்'. (புகாரி). இதனடிப்படையில் மருத்துவர்கள் அல்லது செவிலியர்கள் எதிர்ப் பாலின நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பது அனுமதிக்கப்பட்டதாகும். ஆனால் ஒரே பாலின செவிலியர்கள் அல்லது மருத்துவர்களைத் தேடுவது சிறந்ததாகும் என இஸ்லாமிய மாநாடான Organization of the Islamic Conference (OIC Fatwa Number-81, 8/12) இன் தீர்மானத்தின்படி இது குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இந்த அமைப்பின் மூலம் மருத்துவத்துறையில் பெண்களை ஊக்குவிக்க தங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுமாறு சுகாதார அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டும் வருகின்றது (Al-Haj, 2018)[27].

மேலும் ஆண் செவிலியர்கள் இல்லாத போது ஒரு ஆணுக்கு சிகிச்சை அளிக்க பெண் செவிலிக்கு அனுமதியுண்டு என சவூதி அரேபியாவின் இஸ்லாமிய பத்வா குழு உறுப்பினர்கள் மற்றும் இப்தா நிலைக் குழு அளித்த பத்வாவில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது (Al-Haj, n.d.)[27].
இதற்கு ஆதாரமாக அறப்போராட்ட களங்களில் ஆயிஷா (ரழி) மற்றும் உம்மு சுலைம் (ரழி) ஆகியோர் தண்ணீர் பைகளை தங்கள் முதுகில் சுமந்து சென்று காயப்பட்டவர்களுக்கு நீர் புகட்டியமை மற்றும் தேவையான சிகிச்சைகளை வழங்கியமை போன்றவற்றைக் குறிப்பிட முடியும் (புகாரி, 2880; 4786).

மேலும் விருந்தினர்களுக்கு சேவை செய்து கவனிக்கும்போது ஆண்கள் மத்தியில் பெண்கள் கலக்க வேண்டிய தேவை ஏற்படும். அபூ உஸைத் அஸ் ஸைதி என்ற ஸஹாபி திருமணம் செய்து கொண்டபோது அவர் நபி (ஸல்) அவர்களையும் அன்னாரின் தோழர்களையும் விருந்திற்கு அழைத்தார்கள். அவர்களுக்கான உணவை அவரது மனைவி உம்மு உஸைத் தயாரித்துப் பரிமாறினார்கள் (புகாரி, 4887).

மேலும் பத்ஹ் அல் கதீர் எனும் நூலில் அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் ஒரு பெண்ணை அவருக்கு செவிலியராக பணிபுரிய வேலைக்கு அமர்த்தியதாகவும் அவரது காலின் காயத்திற்கு அந்த பெண் தையல் இட்டு தலைக்கு கட்டு இட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட ஹதீஸ்கள் போர்க் காலங்களிலும் இக்கட்டான சூழ்நிலைகளிலும் சமூக நலனை நிறைவேற்றும் பொருட்டு ஆண்களுடன் பெண்கள் கலந்து பணிபுரிய அனுமதி வழங்கப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டுகின்றது.

## 2. சிறுபான்மை சூழலில் முஸ்லிம் பெண்கள் செவிலியர்களாக பணிபுரியும் போது பேண வேண்டிய வரையறைகள்

அமெரிக்காவின் முஸ்லிம் சட்ட நிபுணர்களின் பத்வா குழு உறுப்பினரான Al-Haj (2018)[27] ஒரு முஸ்லிம் பெண் இஸ்லாமிய சூழலிலும், சிறுபான்மை சூழலிலும் தாதியராகப் பணிபுரியும் போது கடைபிடிக்க வேண்டிய வரையறைகளை Assembly of Muslim Jurists in America (AMJA) என்ற பத்வா அமைப்பினூடாக வெளியிட்டுள்ளார்.

- முஸ்லிம் பெண் தாதியர்களாக பணிபுரியும் போது சிக்கலை எதிர்கொள்ளாத அமைப்புகளில் பணிபுரிய வேண்டும்.
- ஆண் நோயாளிகளை கழுவ வேண்டி ஏற்படும் போது ஆண் தாதியர்களிடம் அதற்கான உதவியை பெறல். அவசிய தேவைகள் அல்லாத போது பெண் நோயாளிகளை மாத்திரம் கவனித்தல்.
- செவிலியர்களாக அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடமை எதுவோ அதை மாத்திரம் செய்தல்.
- அவசியம் அல்லது நிர்ப்பந்த நிலையில் மட்டும் எதிர்பாலினரைத் தொடுதல்.
- எதிர்பாலினரைத் தொடும்போது கையுறைகளைப் பயன்படுத்துதல்.
- எதிர்ப்பாலின நோயாளிகளிடையே தனிமையைத் தவிர்த்தல்.
- மேலும் எதிர்பாலின நோயாளிகளிடம் நெருங்கிப் பழகுவதைத் தவிர்த்தல்.
- ஹிஜாப் இனை முடியுமானளவு பேணிக் கொள்ளல்.

## முடிவுரை

சமூகத்தில் மாற்றங்கள் இடம்பெற வேண்டுமாயின் அதற்கான முன்னெடுப்புக்கள் அவசியமாகும். எனவே, ஆடை அமைப்பினை ஒரு சவாலாகக் கருதாமல் முஸ்லிம் பெண்கள் தாதியர் கற்கை நெறிக்கு உள்வாங்கப்படும் போது, அங்கு தோன்றும் குறித்த பிரச்சினைகள் தொடர்பான ஆய்வுகள் விரிவுபடுத்தப்படும். இது முஸ்லிம் தாதியர்களின் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடியுமாக இருக்கும். எனவே, சமூக நலனை கருத்திற்கொண்டு ஆர்வமுள்ள முஸ்லிம் மாணவிகள் குறித்த கற்கையைத் தெரிவு செய்ய முன்வரவேண்டும். மேலும் குறித்த தொழிலை அல்லாஹ்வுக்காக என்ற நேர்மையுணர்வுடன் செய்ய முயலும்போது அது

முஸ்லிம் சமூகத்தின் பர்ளு கிபாயாவினை நிறைவேற்றப் பங்களிக்கின்றது. இதனடிப்படையில் முஸ்லிம் பெண் தாதியர்கள் நோயுற்றவர்களுக்கும், பலவீனமானவர்களுக்கும் உதவும்போது அத்தொழில் இறைவனிடத்தில் மகத்தான கூலியை பெற்றுத்தரவல்லது.

## References


1. Habeebullah, M.T., Mazahir, S.M.M., & Nairoos, M.H.M. (2016). Muslimkaḷ Siṟupāṉmaiyāka Vāḻum Nādukaḷil Fik'h Rītiyāṉa Karuttu Muraṇpāṭukaḷai Kaiyāḷum Muṟaikaḷ- Ilaṅkaiyai Maiyappaṭuttiya Oru Aiyvu [Methods of Dealing with Jurisprudential Differences in Muslim-Minority Countries- A Study Based on Sri Lanka. *Proceedings of 3rd International Symposium of Faculty of Islamic Studies and Arabic Language on the Role of Islamic and Arabic studies in the National Development* (1-11). South Eastern University of Sri Lanka. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/2651
2. Vellimedai Plus. (2014, February 18). Contemporary issues and solutions provided by Islam. Vellimedai Plus. https://vellimedaiplus.blogspot.com/2014/02/blog-post_18.html?m=1
3. Vikaspedia. (n.d.). Seviliyam Matrum Seviliyathurai [Nursing and Nursing Field]. *Vikaspedia*. Retrieved from https://ta.vikaspedia.in/health/ on 02/01/2021.
4. Ramesh. (2020, May 12). Manam Konādhu Sevaiyil Sirandhu Vilangum Seviliyar Innoru Thāi [Another Mother is a Nurse Who Excels in Mindless Service]. *Keelai News*. http://keelainews.com/2020/05/12/niti/
5. International Council of Nurses. (n.d.). Nursing Definitions. International Council of Nurses (ICN). Retrieved from https://www.icn.ch/nursing-policy/nursing-definitions on 02/01/2022.
6. Rassool, G. H. (2000). The crescent and Islam: healing, nursing and the spiritual dimension. Some considerations towards an understanding of the Islamic perspectives on caring. Journal of Advanced Nursing, 32(6), 1476–1484. https://doi.org/10.1046/j.1365-2648.2000.01614.x
7. Taleghani, F., Alimohammadi, N., Mohammadi, E., & Akbarian, R. (2013). Nursing in Islamic thought: Reflection on application nursing metaparadigm concept: A philosophical inquiry. *Iranian journal of nursing and midwifery research*, *18*(4), 272–279. https://www.ncbi.nlm.nih.gov/pmc/articles/PMC3872860/
8. Thoothu. (2018, January 21). Navēna Maruthuva Ariviyal- Muslimgalin pangalipu [Muslims' Contribution to Modern Medical Science]. *Thoothu*. http://thoothu2018.blogspot.com/2019/01/blog-post_21.html?m=1
9. Holy Qur'an [Translation of the Meanings of The Noble Quran in Tamil]. (n.d.). Madinah: King Fahd Complex for the Printing of the Holy Qur'an.
10. Abedin, S. M. (2007). Muslim minority and majority countries: a comparative study of demographic, social and economic data. Journal of Muslim Minority Affairs, 16(1), 73-98. https://doi.org/10.1080/13602008908716129
11. Ismail. (2019). Ciṟupāṉmaic camūkam!! [Minority community!!]. Ismail Salafi. Retrieved from http://www.ismailsalafi.com/sirufaanmai-samooham/ on 03/01/2021.
12. Hassan, M.H. (2020, December 11). Female Muslim Working as a Nurse in Singapore. *Haniff.SG*. http://haniff.sg/en/short-articles/article-female-muslim-working-as-a-nurse-in-singapore/
13. Islam Question and Answer. (1998, September 21). Ruling on Muslim women working as nurses and doctors. *Islam Question and Answer*.

https://islamqa.info/en/answers/286/ruling-on-muslim-women-working-as-nurses-and-doctors
14. Natarajan, V.S. (2021). Mē 12 - ulaka ceviliyar tiṉam: Taṉṉalamaṟṟa cēvaiyiṉ maṟu'uruvam ceviliyarkaḷ [May 12 - World Nurses' Day: Nurses are the epitome of selfless service]. *HinduTamil*. https://www.hindutamil.in/news/tamilnadu/669586-world-nurse-day.html
15. Zahid. (2016). Nursing. *National Health Portral India*. https://www.nhp.gov.in/
16. Johns Hopkins Medicine. (n.d.). Types of Home Health Care Services. Health. Retrieved from https://www.hopkinsmedicine.org/health/caregiving/types-of-home-health-care-services on 03/01/2021.
17. Wajihuddin, M. (2010, November 3). Encourage more Muslim women to take up nursing. *The Times of India*. https://timesofindia.indiatimes.com/city/mumbai/encourage-more-muslim-women-to-take-up-nursing/articleshow/6861954.cms?from=mdr
18. Saidun, S., Akhmetova, E., & Rahman, A. A. (2018). Muslim Female Healthcare Personal Dress Code: A Proposed Guideline. *IIUM Medical Journal Malaysia, 17*(2), 57–70. https://doi.org/10.31436/imjm.v17i2.272
19. Husainamma. (2016, February 1). Peṇkaḷukku maṭṭumtāṉā 'hijāp'? [Is 'hijab' only for women?]. *HinduTamil*. https://www.hindutamil.in/news/opinion/letters/69313-.html
20. Glassé, C. (2003). *The New Encyclopedia of Islam*. Rowman Altamira.
21. Bissett, J. (2021). Muslim women, uniforms and dentistry. *Dental Nursing, 17*(6), 269–272. https://doi.org/10.12968/denn.2021.17.6.269
22. Saidun, S., Akhmetova, E., & Rahman, A. A. (2020). Harmonizing Culture, Religion, and Professional Nursing Standards. *Dress- The Journal of the Costume Society of America 47*(1), 31–44. https://doi.org/10.1080/03612112.2020.1756591
23. Life in Saudi Arabia. (n.d.). Saudi Arabia bans nurses from wearing tight clothes. *Life in Saudi Arabia*. Retrieved from https://lifeinsaudiarabia.net/saudi-arabia-bans-nurses-from-wearing-tight-and-revealing-clothes/ on 03/01/2022.
24. Islamweb. (2003, September 8). Nurses' uniform (Fatwa no. 86145). *Islamweb*. https://www.islamweb.net/en/fatwa/86145/nurses-uniform
25. Saqr, A. (2021, November 14). Is it permissible for women to become nurses?. *AboutIslam*. https://aboutislam.net/counseling/ask-the-scholar/women-issues/is-it-permissible-for-women-to-become-nurses/
26. Abd Al-Mu`iz. (n.d.). The Nursing of a man by a woman. *Ferkus*. Retrieved from https://ferkous.com/home/?q=en/fatwa-en-18 on 03/01/2022
27. Al-Haj, Hatem. (2018, August 29). What are the Islamic ethics for Nurses?. *AboutIslam*. https://aboutislam.net/counseling/ask-the-scholar/morals-manners/islamic-ethics-for-nurses/